NATIONS UNIES
DROITS DE L'HOMME
HAUT-COMMISSARIAT

UNITED NATIONS
HUMAN RIGHTS
OFFICE OF THE HIGH COMMISSIONER

HAUT-COMMISSARIAT AUX DROITS DE L'HOMME • OFFICE OF THE HIGH COMMISSIONER FOR HUMAN RIGHTS
PALAIS DES NATIONS • 1211 GENEVA 10, SWITZERLAND
www.ohchr.org • TEL: +41 22 917 9000 • FAX: +41 22 917 9008 • E-MAIL: registry@ohchr.org

# இலங்கையில் OHCHR நடத்தும் நுண்ணாய்வு ஆய்வுக்குரிய விதிமுறைகள்

**1.** அதிகாரப்பத்திரமும், அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பான கடப்பாடுகள்.

ஐக்கியநாடுகளின் மனித உரிமைக்கவுன்சிலால் 2014ம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட இல A/HRC/25/1 கொண்ட தீர்மானம் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கும் பொறுப்புக் கூறலுக்கும், மனிதஉரிமைகள் தொடர்பானதும் ஆகும் . அதில் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் (LLRC) கால வரையறைக்குள் நிகழ்ந்தாகக் கூறப்படும் இலங்கையில் இரு சாரர்களாலும் செய்யப்பட்டதாகக் கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல்களும் துஸ்பிரயோகங்கள் பற்றியும் விரிவாக நுண்ணாய்வு செய்யும் படியும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் வேண்டப்பட்டுள்ளார். மேலும் ஐ.நாவின் விசேட நடைமுறை ஒழுங்குகள் பற்றிய அதிகாரம் பெற்றவர்களினதும் சம்பந்தப்பட்ட நிபுணர்களின் உதவியுடன் நடை பெற்றதாகக் கருதப்படும் மீறல்கள் குற்றவியல் செயற்பாடுகளின் உண்மைகளையும் அவை ஏற்பட்ட சந்தர்ப்பங்களையும் உறுதிப்படுத்தி அவற்றிக்கான பொறுப்புக்கூறலையும்சட்டத்தின் பிடியில் அகப்படாது இருக்கும் நோக்கத்துடன் அவர்கள் செய்ததாகக்கூறப்படும் மீறல்களையும் குற்றவியல் நடவடிக்கைகளையும் உறுதிப்படுத்துமாறு வேண்டப்பட்டுள்ளார். குறித்த கவுன்சிலின் உயர் ஆணையாளரிடம் சபையின் 27வது அமர்வின் போது நாளது தேதி வரை நடை பெற்ற விடயங்கள் தொடர்பாக வாய் மூல அறிக்கையினையும், 28வது அமர்வின் போது புலனாய்வு தொடர்பான விபரமான அறிக்கை ஒன்றினையும் சமர்ப்பிக்கும் படி கேட்டுள்ளது .

இவ் அதிகாரப்பத்திரத்திற்கு அமைவாக ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையாளர் ஜெனிவாவில் மையம் கொண்ட இலங்கை தொடர்பான OHCHR நுண்ணாய்வினை OISL தயாரித்துள்ளது.

**2.** கால வரைபு

இவ் அமைப்பினது நுண்ணாய்வின் காலம் LLRC யினது காலத்திற்கு,அதாவது 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ம் திகதி முதல் அது இலங்கை ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பித்த திகதியாகிய 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி வரையிலாகும் .தொடர்ந்து நடைபெறும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக அல்லது குறித்த நிகழ்வுகளை மேலும் சிறந்த வகையில் விளங்கிக் கொள்ள உதவக்கூடிய தொடர்பான தகவல்களை குறித்த கால எல்லைக்கு அப்பால் உள்ளதெனினும் அவற்றை சந்தர்ப்பதிற்குகமைய OISL கவனத்தில் எடுக்கலாம்.

**3.** சட்டம் சார்ந்த வரம்பு.

முரண்பாட்டோடு தொடர்பான இரு கட்சிக்காரர்களினாலும் இழைக்கப்பட்டதாக கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல்களும் துச்பிரயோகங்களும் அவற்றோடு சம்மந்தப்பட்ட குற்றவியல் தொடர்பாக நுண்ணாய்வு செய்ய வேண்டுமென OISL க்கு கொடுக்கப்பட்ட அதிகாரப்பத்திரம் வேண்டுகிறது.இலங்கை ஏற்றுக்கொண்டுள்ள சர்வதேச மனித ஒப்பந்தகளுக்கு அமைவாகவும் இலங்கைக்குள்ள கடப்பாடுகள் தொடர்பானதே இச் சட்டம் சார்ந்த வரம்பு ஆகும். ஒரு அரசு அல்லாத செயற்பாட்டாளர் குறித்த மனித உரிமை ஒப்பந்தங்கள் கட்சிக்காரர்களாக இல்லாதிருப்பினும், ஒரு அரசின் அதிகாரப்பரப்பின் கட்டுப்பாட்டினைக் அப்பகுதியை அரசு அல்லாத குழுவொன்று யதார்த்தமாக (defacto) கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தால் அவ் அமைப்பிற்கும் குறித்த மனித உரிமைகளைப் பேண வேண்டிய கடப்பாடு உள்ளது என்பது தற்காலத்தில் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒரு விடயம் ஆகும்.

நுண்ணாய்வு செய்யப்படவேண்டிய காலத்தின் போது இலங்கையில் உள்ளகத்தில் ஆயுதத்துடனான முரண்பாடு நடை பெற்றுக்கொண்டிருந்தது. ஆகவே அரசும் அரசு சாராத குழுக்களும் இம் முரண் பாட்டின் போது சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு அமைவாக குறிப்பாக சர்வதேச நாடுகளிற்கு இடையிலான அல்லாத முரண்பாடுகளுடன் தொடர்பான ஜெனிவா சமவாயத்தின் ஏற்பாடுகளை நோக்க வேண்டிய தேவை உள்ளது. அதாவது இவ் விடயம் தொடர்பில் கர்ருக்கொண்டபாடங்கள் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு செயற்பட்ட அதே சட்ட வரம்புக்கு ஒத்தாகும் .நுண்ணாய்வு செய்யப்படப்போகும் நிகழ்வுகள்,சம்பவங்களின் பொழுது சர்வதேசக் குற்றவியல் சட்டத்திற்கு அமைவான குற்றங்கள் இளை க்கப்பட்டுள்ளதா எனவும் கவனம் செலுத்தும்படி OISLக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரப்பத்திரம் வேண்டியுள்ளது.

**4.** நிபுணர்கள்

2013ம் ஆண்டு ஜூன் மாதத்தில் உயர் ஆணையாளர் மாட்சிமை மிகு நிபுணர்கள் மூவரை நியமித்துள்ளார். அவர்கள் பின்வருபவர்கள் ஆவர்: முன்னை நாள் பின்லாந்து நாட்டு ஜனாதிபதி திரு மார்ட்டி அஹ்டிசாரி, நியூசிலாந்தின் முன்னை நாள் மேல் நீதிமன்ற நீதிபதி சில்வியா ஹாட்றைற் அம்மையார், பாகிஸ்தான் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னை நாள் அதிபர் அஸ்மா ஜகாங்கிர் அம்மையார் ஆவர், இவர்கள் புலனைவுகளின் பொழுது அதற்கு ஒத்தாசை வழங்கி ஆலோசகர்களிர்க்கான வகி பாகத்துடன் தொடர்ச்சியாக சுயாதீனமாக தகவல்களை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

கவுன்சிலின் வேண்டுதலுக்கமைய OISL ஐ.நாவின் விசேட நடைமுறைகள் தொடர்பாக குறிப்பிட்ட அதிகாரப்பத்திரம் பெற்றவர்களினதும் உதவியைப் பெற்றுக்கொள்ளும். அவர்களுள் நீதிக்குப்பிறம்பான கொலைகள், காணாமல் போனமைகள், உள்ளகத்தில் இடம்பெயர்ந்தோர், சட்ட ஆதாரமின்றி தடுத்து வைக்கப்பட்டவர்கள், பெண்களிற்கு எதிரான வன்முறை,சித்திரவதை

முதலியவை தொடர்பான விசேட நடைமுறை ஒழுங்குகள் சம்பந்தமாக அதிகாரம் பெற்றவரும் அடங்குவர்.

**5.** செயற்பாட்டு வழிமுறைகள்

இரு சாராரும் இளைத்ததாகக்கருதப்படும் மீறல்கள், துஸ்பிரயோகங்கள், பாரிய குற்றங்கள் பற்றிய உண்மை நிலையையும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு OISL பின் கூறப்படுபவற்றை செய்யும். அவையாவன தர்போதைக்குள்ள ஆவணங்கள், தகவல்கள் முதலியனவற்றை அலுவகத்தில் இருந்தவாறே மீளாய்வு செய்யும். இவற்றுள் அரசினதும், குடியியல் சமுகத்தினதும் அறிக்கைகளையும் ஆவணங்களையும் பாதிப்புற்றோர் உயிர் தப்பியோர் சாட்சிகள், குற்றம் செய்ததாகக் கருதப்படும் முதலியோர் சாட்சியங்களையும் பெற்றுக் கொள்வதுடன் அவை தொடர்பான செயற்கோள் படங்கள், உறுதிபடுத்தப் பட்ட படங்கள், நிழற்படங்கள் அலுவலகரீதியான ஆவணங்கள் முதலியன அடங்கும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்கையில் காரணிகளையும் கூற்றுகளையும் உறுதிப்படுத்துகையில் ஆதாரங்களை ஏற்றுக்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களிற்கு அமைவாக இருக்க வேண்டும். (இது தொடர்பான குறிப்புகள் கீழே உள்ளன)

கவுன்சிலின் தீர்மானத்தின் எதிர்பார்ப்பிற்கமைய OISL தொடர்ந்தும்இலங்கை அரசாங்கத்தின் தொடர்பைப் பேண முற்படுதல் வேண்டும் .உயர் ஆணையாளர் தொடர்ந்தும் அந் நாட்டின் அரச அலுவலர்களையும் ஏனையோரையும் நாட முயற்சிக்க வேண்டும் எனவும் கோருகின்றார்.

OISL ஐ.நாடுகளின் ஏனைய அமைப்புக்களுடனான தொடர்புகளை மேம்படுத்தி ஒத்துழைத்து அவர்களுடன் தொடர்பை வளர்த்துக் கொள்ள முயற்சி எடுக்கும். அவ்வகையான அமைப்புக்களுள் சிறப்பு முகவர்கள்,அக்கறை உள்ள நிறுவனங்கள்,கல்வி சார் நிபுணர்கள் அரசசார்பற்ற அமைப்புகள், சமூக நிறுவனங்கள் முதலியன அடங்கும்.

எவரேனும் ஒரு தனிநபரோ,ஸ்தாபனமோ ,அரசோ எழுத்து மூலமாக OISL க்கு தகவல் சமர்பிக்கலாம். இவ் வகையான சமர்ப்பணங்கள் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பப்படலாம்; oisl_submissions@ohchr.org.

OISL தனது பொறுப்புக்கள் தொடர்பாக செயற்படுகையில் எல்லாத் தருணங்களிலும் பின்வரும் கோட்பாடுகளிற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கும். அவையாவன சுயாதீனம், பக்கசார்பின்றி,செயல் இலக்குடன், வெளிப்படைத் தன்மையாகவும் எவருக்கும் பாதகமில்லாத வகையிலும் செயல்படுவதாகும்.

**6.** சாட்சிகளைப் பாதுகாத்தல்

சாட்சியங்களையும் ,பாதிப்புற்களையும் பாதுகாப்பது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு தேவைப்படும் நடவடிக்கைகளை OISL எடுக்கும்.அதற்கென தேவைப்படும் நடவடிக்கைகளை OISL எடுக்கும் .அதற்கென தேவைப்படும் வழிமுறைகளையும், செயற்பாட்டு ஒழுங்குகளையும் ஏற்று அவ் வகையானோரை அதன் சகல செயற்பாட்டு காலங்களிலும் பாதுகாக்கும் நோக்கத்துடன் செயற்படும்.

OISL உடன் இலங்கையில் இருந்து தொடர்பு கொள்ளும் பாதிப்புரோரையும், சாட்சிகளையும், ,ஏனையோரையும் பாதுகாக்கும் கடப்பாடு இலங்கை அரசாங்கத்திற்கு உள்ளது.இவ்வகையில் OISL உடன் தொடர்பு எந்த வகையலும் துன்பதிற் குள்ளாக்கப்படவோ, அச்சுறுத்தப்படவோ, விரட்டப்படவோ, தொந்தரவுபடுத்தவோ, பழிவாங்கப்பட மாட்டார்கள் என்று பொறுப்பேற்கும்படி வேண்டப்படுவர்.

**7.** தகவல்களின் அந்தரங்கத்தன்மை

தகவல்களின் அந்தரங்கத்தன்மையைப் பேணுவதற்கு தேவையான சகல பாதுகாப்பு ஒழுங்குகளையும் தேவைப்படும் வழிமுறைகளையும் OISL செய்யும்.தகவல்களை வழங்கிய நபர்களின் பெயர்களை தமது அறிக்கைகளின் பொருத்தமான வகையில் வெளிப்படுத்தாமை இதனுள் அடங்கும்.தமது வேலைப்

பொறுப்புக்கள் முடிவடைந்ததும்,தமக்கு கிடைத்த சகல அந்தரங்கத் தகவல்களையும் ஐ.நாவின் அந்தரங்கத் தகவல்களைப் பாதுகாக்கும் கண்டிப்பான ஒழுங்கு முறைகளிற்கு அமைய OISL சுவடிப்படுத்தும்.

**8.** ஆதாரங்களின் தரம்

ஐக்கிய நாடுகளின் வேறு உண்மைகளைக் கண்டறிய நியமிக்கப்பட்ட அமைப்புக்களின் நடைமுறைகளிற்கு முரண்பாடற்ற வகையில் OISL தான் கண்டறியும் உண்மைகளை "நியாயப்படுத்தக்கூடிய வகையில் நம்பக்கூடியது" என்ற அடிப்படையிலான தரத்தினைக் கொண்ட ஆதாரங்களாக இருக்க வேண்டும். OISL நம்பக்கூடிய வகையிலானதும், வேறு வேறு தகவல்களிற்கு முரண்பாடற்ற வகையில் குறித்த சம்பவங்கள் நடை பெற்றுள்ளது என்று காட்டக்கூடிய வகையில் நம்பகரமான தகவல் கொத்தொன்றினைப் பெற்றிருப்பின் அது நியாயப்படுத்தக் கூடிய வகையில் அவ்வகையான சம்பவம் ஒன்றினதோ அல்லது மீறல்களில் குற்றவியல் செயல்களின் சாயல் இருப்பின் அவை நியாயப்படுத்தக்கூடிய வகையிலான நம்பகக்கூடிய ஆதாரங்கள் எனக்கருதலாம். இத் தரத்திலான ஆதாரம் சர்வதேச மனிதாபிமான,மனித உரிமைகள் சட்ட மீறல்களும் ,சர்வதேச பாரிய குற்றவியல்சம்பவங்கள் பற்றியோ நீதி நுண்ணாய்வு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று கோருவதற்கு போதிய உயர் தரத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.
குறிப்பிட்ட நபர்கள் மீறல்களில் சம்பந்தப்பட்டுளார்கள் என்று கருதி அவர்களை அடையாளம் காட்டக் கூடிய தகவல்களை மதிப்பீடு செய்கையில்,OISL ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட வேறு சந்தர்ப்ப சூழநிலைகள் .குறித்த ஒரு நபர் சம்பந்தப்பட்ட பாரிய குற்றத்தினை செய்திருப்பார் என்பதனை நியாயப்படுத்தக் கூடிய வகையில் சந்தேகிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். OISL பாரிய குற்றம் ஒன்று இளைக்கப்பட்டுள்ளது எனத் தீர்ப்பு கூறலாகாது .மாறாக அக் குற்றத்தை இழைத்திருக்கக் கூடியவர்கள் தொடர்பாக சந்தேகப்படக்கூடியவர்களை மதிப்பீடு செய்து எதிர் காலத்தில் குற்றவியல் நுண்ணாய்வுகளிற்கு வழிவகுத்தல் வேண்டும்.

**9.** இலங்கை அரசாங்கத்துடன் ஒத்துழைத்தல்

குறித்த கவுன்சில் அதன் தீர்மானத்தில் மனித உரிமைகளிற்கான உயர் ஆணையாளரின் அலுவலகம் குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் எடுக்கும் முயற்சிகளிற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனக்கோரியுள்ளது. அபவ்வகையான ஒத்துழைப்பு என்பது அந் நாட்டின் அதிகார எல்லைக்குள் தங்கு தடையின்றி போக்குவரத்து செய்வதற்கான சுதந்திரம், தடையின்றி சகல இடங்களையும்,ஸ்தாபனங்களையும் தொடர்பு கொள்ள தேசிய,உள்ளக இராணுவ அதிகாரிகள் முதலியோரின் பிரதிநிதிகளையும், சமூகத் தலைவர்கள்,அரசசார்பற்ற ஸ்தாபனங்கள், வேறு அமைப்புக்களையும் சந்தித்து பேட்டி காணும் சுதந்திரம் உள்ளடங்கும். மேலும் அதிகாரப் பத்திரத்தின் விதிகளை நிறைவேற்று முகமாக தகவல் அறிந்த வேறு எந்த நபரையாவது சந்திக்க, அவர்களிடம் இருக்கும் ஆவணங்கள், பௌதீக சாட்சியங்கள் பெறும் உரித்தும் அடங்கும். இதே நிபந்தனைகளிற்கு அமைய நுண்ணாய்வு செய்கையில் OISL பாதிப்புற்றோரை பேட்டி காணும் போதோ, சாட்சியங்களையும் வேறு தகவல்களையும் சேகரிக்கும் போதோ அப்பேர்ப்பட்டவர்கள் வேறு ஒரு நாட்டின் அதிகார எல்லைக்குள் இருப்பார்களாயின் அப்பிரதேச அரசுகளும் OISL உடன் ஒத்துழைக்க வேண்டும் என வேண்டப்படுகின்றார்கள்.

**10.** சிறப்புரிமைகளும், விடுபாட்டுரிமைகளும், வசதிகளும்

OISLஇன் நிபுணர்கள் 1948ம் ஆண்டின் ஐ.நாவின் சிறப்புரிமைகளும், விடுபாட்டு உரிமைகளும் தொடர்பான சமவாயத்தின் உறுப்புரிமை IV ற்கு அமைவாக கடமை ஒன்றைச் செய்யப்பணிக்கப்பட்ட நிபுணர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளையும் விடுபாட்டு ரிமைகளையும் அனுபவிப்பவராக இருப்பர். OISL ன் OHCHR ஆளணியைச் சேர்ந்தவர்கள் நுண்ணாய்வு செய்வது தொடர்பான நடவடிக்கைகளோடு சம்பந்தப்பட்ட சமவாயத்தின் உறுப்புரிமை V ,VI I முதலியவற்றிற்கு அமைவான சிறப்புரிமைகளையும் விடுபாட்டுரிமைகளையும் கொண்டவராக இருப்பர்.

குறித்த நுண்ணாய்வுகளை சுயாதீனமாக நடாத்துவதற்கு தேவைப்படும் வசதிகளை வழங்க வேண்டிய பொறுப்பு பற்றிய கடப்பாட்டை சகல அரசாங்கங்களுக்கும் ஞாபகம் ஊட்டப்படுகின்றது.